இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04-07-2023

# ஆளுநரின் அதிகார அத்துமீறல்கள்! 1

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதாக ஆளுநர் ரவி அவர்கள், ஒரு அறிக்கையை வெளியிட்டார். 'சட்டரீதியாக இதனைச் சந்திப்போம்' என்று முதலமைச்சர் சொன்ன மூன்று மணி நேரத்துக்குள் அவரே அதனை திரும்பப் பெற்றுவிட்டார்! 'திரும்பப் பெறவில்லை, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது' என்று சில உளறுவாயர்கள் உளறிக் கொண்டு இருக்கிறார்கள். 'நிறுத்தி வைத்தாலே, நிராகரிக்கப் பட்டதாகத் தான் அர்த்தம்' என்று வியாக்கியானம் சொன்னவர்தான் ஆளுநர். எனவே அவர் இப்போது நிறுத்தி வைத்திருப்பதே, மொத்தமாக திரும்பப் பெற்றதாகவே பொருள்.

இவை முழுக்க முழுக்க ஆளுநர் ரவியின் அதிகார அத்துமீறல் ஆகும். இது நிர்வாக ஒழுக்கமீறல் ஆகும். ஒரு அமைச்சரை நியமிப்பதும் - அந்த அமைச்சரை நீக்குவதும் முதலமைச்சரின் தனிப்பட்ட விருப்புரிமை சார்ந்ததே தவிர - வேறு யாருக்கும் அந்த அதிகாரம் இல்லை.

**ஒரு அமைச்சருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பதால் - அவரைதான் நியமிப்பதாகவோ - அதனாலேயே நீக்கி விடலாம் என்றோ அர்த்தம் அல்ல. அந்த அதிகாரம், நியமனப் பதவியில் உட்கார வைக்கப்பட்டு இருக்கும் ஆளுநருக்கு இல்லை. ஆளுநர் என்பவர் யாராலும் தேர்ந்தெடுக்கப் படுபவர் அல்ல. சும்மா இருப்பவர்களை திருப்திப்படுத்த ஒன்றிய அரசாங்கம் தருகின்ற டம்மி மரியாதை ஆகும். ராஜா வேஷம் போட்டவர் ராஜாவாக நினைத்துக் கொள்வது மாதிரி - ஆளுநர் ரவி தன்னை நினைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.**

அமைச்சரவையின் ஆலோசனைப்படி தமிழ்நாடு அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு உதவி செய்ய வேண்டிய ஆளுநர் - தான் ஒழுங்காக பார்க்க வேண்டிய வேலை எதையும் பார்க்காமல் - இப்படி ஆகாத காரியங்களில் மூக்கை நுழைத்து மூக்கறு படுவது அவருக்கு வழக்கமாக இருக்கிறது.

**செந்தில் பாலாஜி விவகாரத்தைக் கூட அரசியல் ரீதியாக விமர்சிக்கலாம். ஆனால், ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்தை எத்தனை நாட்கள் ஊறுகாய்ப் பானையில் போட்டு ஊற வைப்பது போல கிண்டி மாளிகையில் போட்டு மூடி வைத்திருந்தார் ஆர்.என்.ரவி. அதே நேரத்தில் ஆன்லைன் ரம்மி நடத்தும் கம்பெனிகளை அவர் அழைத்துப் பேசியது சமூக ஊடகங்களில் வெளியானது. மகா யோக்கியர் இதுவரை அதற்கு ஏதாவது பதில் அளித்துள்ளாரா என்றால் இல்லை. தினந்தோறும் யாருக்காவது அறிவுரை சொல்வதை வழக்கமாக வைத்திருக்கும் அவர், ஆன்லைன் ரம்மி தடை மசோதாவுக்கு அனுமதி தராமல் இழுத்தடித்ததால் இடைப்பட்ட காலத்தில் 40 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள். இது ஆளுநரின் பிடிவாதத்துக்கு கிடைத்த பலிகள் ஆகும். இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டியது யார்? நீட் தற்கொலைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்?**

13 - க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு இதுவரை அனுமதி தராமல் அவரது மேஜையில் கிடக்கிறது. அதில் கையெழுத்துப் போட வேண்டியது தான் அவரது வேலைகள் ஆகும். அந்த வேலையைப் பார்க்காமல், வேதாந்தம் பேசிக் கொண்டு இருக்கிறார். சனாதனம் பற்றி பேசுவதுதான் அவருக்கு விருப்பமானதாக இருந்தால் - சனாதன வகுப்புகளை எடுக்கப் போகலாமே? எதற்காக கவர்னராக இருந்து கொண்டு கழுத்தறுக்கிறார்?!

தமிழ்நாட்டுக்கு வந்தது முதல் திருக்குறளை கேவலப்படுத்துவது - தமிழைப் பழிப்பது - வள்ளலாருக்கு தவறான பொருள் சொல்வது என்று தமிழ்நாட்டை கொச்சைப்படுத்துவதையே தொழிலாக வைத்துள்ளார். தமிழ்நாடு என்று சொல்லாதே - தமிழகம் என்று சொல் என்றார். இவருக்கு என்ன வந்தது? தமிழ்நாடு என்று சொன்னால் இவருக்கு வலிக்கிறதா? வலிக்கிறது என்றால் எதற்காக தமிழ்நாட்டில் இருக்க வேண்டும்? வேறு மாநிலத்துக்குப் போக வேண்டியதுதானே?

தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு மற்ற மாநில விழாக்களை நடத்துவதன் மூலமாகத் தான் ஏதோ இந்தியாவின் ஜனாதிபதியைப் போல நினைத்துக் கொள்கிறார்.

**வளர்ந்த தமிழ்நாட்டுக்கு முதலீடு வராது என்று சொல்வதும் - குழந்தைத் திருமணத்தை ஆதரித்துப் பேசுவதும் - தன் மனைவியே சிறுமியாக இருந்த போது திருமணம் செய்து கொண்டவர்தான் என்பதும் - ஆளுநர் என்ற பதவி வகிக்க இவர் லாயக்கு இல்லாதவர் என்பதையே காட்டுகிறது. மனப்பக்குவமோ - அறிவுத்திறனோ - சமூகச் சிந்தனையோ இல்லாதவர் என்பதையே இது காட்டுகிறது. இத்தகைய ஒரு மனிதரை தமிழ்நாடு ஆளுநர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை ஆகும்.**

அமைச்சர் பதவியில் இருந்து செந்தில்பாலாஜியை நீக்க வேண்டும் என்ற ஆளுநரின் பத்திரிக்கைச் செய்தியானது, பொதுமேடைகளில் ஆளுநர் உதிர்த்து வரும் எத்தனையோ அபத்தச் செய்கைகளில் இதுவும் ஒன்றாகவே கருத வேண்டி உள்ளது. இது ஏதோ அரசியல் ரீதியான நிலைப்பாடு அல்ல, சட்டரீதியான நிலைப்பாடும் இதுதான் என்பதை இந்தியாவே ஒப்புக் கொண்டுள்ளது.

**ஆளுநருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்ன பதில் கடிதம் எழுதினார்களோ, அதையே இந்தியாவின் மிக மூத்த வழக்கறிஞர்களும் வழிமொழிந்துள்ளார்கள். இந்தியாவின் முன்னணி ஆங்கில நாளேடுகளும் தலையங்கமாகத் தீட்டி இருக்கின்றன.**

- தொடரும்

# தமிழ்மொழி எழுத்தாக மட்டுமில்லை; நம் ரத்தமாக இருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்ச்செல்வன், தமிழரசன், தமிழ்ச் செல்வி என்று பெயர்வைத்துக்கொண்டவர்கள் 18 வயதுக்குமேல், சுமார் 3 லட்சத்து 75 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் கணக்கிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். குழந்தைகளின் பெயரையும் சேர்த்தால் இது இன்னும் அதிகமாகும். மொழிக்காக தம் தேக்குமர தேகத்தை தீக்கிரையாகக் கொடுத்த இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம்.

கடல் கடந்து வந்த பிறகும் - தாய்மொழிக்காக விழா எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றால், மொழி என்பது நம்மைப் பொறுத்தவரையில் எழுத்தாக இல்லை, ரத்தமாக இருக்கிறது. அந்த உணர்வோடுதான் நாம் கூடி இருக்கிறோம்.

**தமிழ் - தமிழினம் தோற்றம்**
**தொன்மைமிகு வரலாறு நமக்குண்டு!**

'தொன்மைத் தமிழரின் பெருமை' என்ற தலைப்பில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். உலகம் தோன்றியதைக் கணிக்க முடியாது மாதிரி - தமிழின் தோற்றத்தையும், தமிழினத்தின் தோற்றத்தையும், கணிக்கமுடியாத அளவுக்கு தொன்மையான வரலாறு நமக்கு உண்டு.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக்கு 1968-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் இருந்து அறிஞர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்களிடம் அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்.

**"சென்ற காலத்தைச் சிந்தை செய்யும்போது உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும், வருங்காலத்தை எண்ணும்போது இடையறாத ஒரு நம்பிக்கையையும், இன்றைய இன்னல்களுக்கு இடையிலும், தமிழர்களின் உள்ளத்திலே, இவ்விழாவின் நிகழ்ச்சிகள் ஏற்றி வைத்திருக்கும் என்பதில் சிறதளவும் ஐயமில்லை. வரலாற்றுக் காலத்திற்கு முன்பு தொட்டு, வளமார் பண்பாடும், உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டில் இத்தகைய வெற்றியினை நாம் எதிர்பார்த்தல் இயல்பானதே" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

**இந்திய துணைக் கண்ட வரலாறு**
**தமிழ் நிலத்திலிருந்து எழுதப்பட வேண்டும்!**

அதனால்தான், "இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு. இனி தமிழ் நிலத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும்" என்ற முழக்கத்தை முன்னெடுத்துச் செயல்பட்டு வருகிறோம். கழக ஆட்சி அமைந்ததும், பல்வேறு ஆய்வுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டில் பொது ஊழிக்கு முன் 6ஆம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதும், படிப்பறிவும், எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக நாம் விளங்கினோம் என்பதையும் கீழடி அகழாய்வு நிலை நிறுத்தியுள்ளது.

அதேபோல், சிவகளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமிநீங்கிய நெல்மணிகளின் காலம் பொது ஊழிக்கு முன் 1155 எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களான கொந்தகை, அகரம், மணலூர்**

★ **தூத்துக்குடி மாவட்டம் - சிவகளை,**
★ **அரியலூர் மாவட்டம் - கங்கைகொண்ட சோழபுரம்,**
★ **கிருஷ்ணகிரி மாவட்டம் - மயிலாடும்பாறை,**
★ **விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டை,**
★ **திருநெல்வேலி மாவட்டம் - துலுக்கர்பட்டி,**
★ **தர்மபுரி மாவட்டம் - பெரும்பாலை**

ஆகிய ஏழு இடங்களில் விரிவான ஆய்வுகள் நடந்து வருகின்றன.

★ கீழடிக்கு அருகில் அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை ஆய்வு செய்தபோது அங்கே நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

★ சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை ஆய்வு செய்ததில் அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளதும் தேக்கி வைக்கப்பட்ட நீர் நிலையில் இருந்து இந்நீர் கொண்டு வரப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் கிடைத்த பொருளானது பொது ஊழிக்கு முன் 1615-ஆம் ஆண்டுக்கும், பொது ஊழிக்குமுன் 2172-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டது என காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தது என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழரின் தொன்மையானது**
**வெளிச்சம் பெற்றுக்கொண்டே இருக்கும்!**

இந்திய அளவில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, காலத்தால் முந்தியது மயிலாடும்பாறைதான். இப்படி ஒவ்வொரு ஆய்வாக வர, வர தமிழரின் தொன்மையானது வெளிச்சம் பெற்றுக்கொண்டே இருக்கப் போகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் "ஒரு பண்பாட்டின் பயணம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்துகொண்டேன். அது புத்தகம் அல்ல, தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலம்!

"சிந்துப் பண்பாடு என்பது 5000 ஆண்டுகள் பழமையானது - அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மொழி தமிழ்மொழி. வாழ்ந்த மக்கள் சங்ககாலத் தமிழரின் மூதாதையர்" - என்பதை அவர் நிறுவி இருக்கிறார்.

**ஆர்.பாலகிருஷ்ணனின்**
**'ஒரு பண்பாட்டின் பயணம்' நூல்!**

இன்றைக்கும் நமது பயன்பாட்டில் இருக்கும் கொற்கை, வஞ்சி, தொண்டி, ஊர், பட்டி, பள்ளி, காவேரி, பாண்டியன், குமரன், மதுரை, வன்னி, வேல் ஆகிய சொற்கள் எல்லாம் சிந்துப் பண்பாட்டு வெளியான குஜராத், மராட்டியம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களில் இருக்கிறது என்பதை அவர் நிறுவி இருக்கிறார். தமிழர்களின் பண்பாட்டுப் பெருமை இது.

சிந்துவெளியில் 'காளைகள்'தான் இருந்தன. இது திராவிடச் சின்னம்! சிந்துவெளி முதல் இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் தமிழரின் தொன்மையைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. தமிழ்நாடு அரசு, தொல்லியல் ஆய்வுகளுக்கு ஊக்கமளிக்கும் அரசாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுகள் அனைத்தையும் உலக ஆய்வாளர்களின் அளவுகோலுடன் மெய்ப்பித்து - அவர்களை ஏற்றுக் கொள்ள வைத்து வெளியிடும் அரசாக அமைந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும். இந்தியாவிலேயே, அதிகப்படியான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். அதிலும், வைகையைச் சுற்றித்தான். தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில் கொண்டு செல்லவும் அரசு திட்டமிட்டுள்ளது.

**தேவநேயப் பாவாணரால்**
**பாராட்டுப் பெற்ற கழக அரசு!**

"தமிழர் அல்லது தமிழ்நாட்டார் முன்னேற்ற வினையை ஒல்லும் வகையால் சொல்லும் வாயெல்லாம் செய்து வருவது தி.மு.க. அரசே" - என்று 1971-இல் தி.மு.க. அரசு குறித்து எழுதினார் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' தேவ நேயப்பாவாணர் அவர்கள். அப்படிப் பாராட்டும் அரசாக இன்றைய திமுக அரசும் செயல்பட்டு வருகிறது.

கீழடி அகழாய்வில் 1000க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60-க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பானை ஓடுகளில் குவிரன், ஆதன் போன்ற தனி நபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்வாயிலாக சமூதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பது வெளிப்படுகிறது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களை உலகத் தமிழர்களும், பொதுமக்களும் கண்டுகளிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் 'கீழடி அருங்காட்சியகம்' தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

**தமிழுக்குச் சொந்தக்காரர்களான**
**நாம் உயரிய பண்பாட்டோடு வாழ்வோம்!**

அடுத்து, திருநெல்வேலியில், பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வருகிறது. திருவாரூரில், கலைஞர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் காண்பதற்கு நீங்கள் அனைவரும் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

பார் முழுதும் சென்று கொடி நாட்டிய தமிழினத்தின் வேர் அறிய வாரீர்!
சீர்மிகு தமிழ்நாட்டின் சிறப்பறிய வாரீர்!
சாதி, மதப்பாகுபாடு பாரோம்!
அமிழ் தமிழுக்குச் சொந்தக்காரர்கள் அனைவரும் ஓரினம் என்ற உயரிய பண்பாட்டைக் கொண்டு வாழ்வோம்!
**யாதும் ஊரே யாவரும் கேளிர்!**
**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!**
வாழ்க தமிழ்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## தமிழ்நாட்டில் கீழடி உள்ளிட்ட ஏழு இடங்களில் விரிவான ஆய்வுகள்!

### புதுக்கோட்டை மாவட்டம்

# திருவரங்குளம் - அறந்தாங்கி ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஜூலை 4 - புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் மற்றும் அறந்தாங்கி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 30.06.2023 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், வெண்ணாவல்குடியில் ரூ.4.21 கோடி மதிப்பீட்டில் கூழையான்காடு முதல் பகவயல் செல்லும் சாலைப் பணிக்கும், ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் செரியாளூர் ஜெமீன் முதல் இனாம் குடியிருப்பு செல்லும் சாலைப் பணிக்கும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பனங்குளம் வடக்கு முதல் பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில் செல்லும் சாலையினை ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிக்கும் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

மேலும் அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி, பாரதிநகர் பகுதியில், பகுதிநேர அங்காடியினையும், அறந்தாங்கி, பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு, கூடுதல் நவீன கழிவறையினையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளை, அனைவரும் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கோட்டப் பொறியாளர் (ஊராட்சி சாலைகள்) வி.செந்தில்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் கே.எஸ்.ரவி, அரு. வடிவேல், ஊராட்சிமன்றத் தலைவர்கள் தங்கராசு (பனங்குளம்), ரஞ்சித்குமார் (குளமங்கலம்), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்



திருச்சி மாவட்ட முன்னாள் நகரச் செயலாளர் கே.கே.எம்.தங்கராஜா, வயது முதிர்வு காரணமாக உடல் நலம் குன்றி இருப்பவரை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன் ஆகியோர் நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார்கள். உடன் கே.கே.எம்.டி. பாபுராஜ், வட்டச் செயலாளர் சி.த.மூவேந்திரன் உள்ளனர்.